**(**அ**.**சா**.21** சாட்சி திருமதி**.**சிவசங்கரி**,** நீலகிரி மாவட்டம்**,** கேத்தி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதால்**,** நீலகிரியிலிருந்து கரூருக்கு வந்து செல்லும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு**,** சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றம் **Crl**.**M**.**P**.**No**. 285/2025 **ல் கட**ந்த **31.01.2025** ம் தேதியில் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து, அ**.**சா**.21** திருமதி**.R.**சிவசங்கரி**,** நீலகிரி மாவட்ட நீதிமன்ற காணொலி அரங்கில் முன்னிலையாகியுள்ளார்**.** நீலகிரி மாவட்ட நீதிமன்ற காணொலி அரங்கில் உள்ள அ**.**சா**.21** இந்நீதிமன்றத்தில் காணொலி மூலம் காணொலி திரையில் இணைக்கப்பட்டுள்ளார்**.** சாட்சி அமர்ந்துள்ள நீலகிரி மாவட்ட நீதிமன்ற காணொலி அரங்கில் அவர் அருகில் வேறு யாரும் இல்லை என்று நீதிமன்ற **Assistant Programmer** திரு**.**வெங்கடேஷ்**,** என்பவர் மூலம் உறுதி செய்யப்பட்டு**,** சாட்சி இந்நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் திருமதி**.**ஜெயந்தி அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்**.)**

**(1** ம் எதிரி கனகராஜ்**, 2** ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3** ம் எதிரி பிரகாஷ் ஆகிய **1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**4** மற்றும் **5** எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு**,** மனு அனுமதிக்கப்பட்டது**).**

**Crl.M.P.Nos.1485/2024** மற்றும் **1486/2024** ல் கடந்த **17.12.2024** அன்று பிறந்த உத்தரவின்பேரில் அ.சா.**21** சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு**, 1** முதல் **5** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாக்குமூலங்களை காலதாமதமாக பதிவு செய்து, காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. .........

ஜோடிக்கப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக எந்தவித முகாந்திரமும் இல்லாமல், சட்டமாறுதல் அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சட்டமாறுதல் அறிக்கை சட்டப்படி நிலைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.